[1994 மார்ச் 25

99 –

அம்பத்தூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தல்

* 21120–திரு. ஜி. காளன்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அம்பத்தூர் நகராட்சிப் பகுதிகளில், பல புதிய குடியிருப்புப் பகுதிகள் உருவாகி உள்ளதால், அதற்கேற்ப அம்பத்தூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் கோரிக்கை, நகராட்சியின் நிதிநிலையைக் கருத்திற் கொண்டு பரிசீலிக்கப்படும்.

திரு. உ. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் நகராட்சி, தொழிற்பேட்டையை உள்ளடக்கிய பகுதியாகும். புதிய குடியிருப்புப் பகுதிகள் எல்லாம் ஏராளமாகப் பெருகி வருகிற பகுதி ஆகும். சமீபத்தில், அதற்கு வரிவிதிக்கப்பட்டு அதிக வருமானம் ஈட்டியிருக்கிறது. ஆகவே, அந்த வருமானத்திலே புதிதாக ஆட்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் நகராட்சியினுடைய மொத்தப் பரப்பளவு சுமார் 40 சதுர கிலோமீட்டர் ஆகும். அதிலே, மக்கள் தொகை மட்டும் இரண்டு லட்சத்திற்கும் மேலாக இருக்கிறது. அந்த மக்கள் தொகையையும், மொத்த தொலைதூரத்தையும் கணக்கிலே கொண்டுதான் இன்றைக்கு அம்பத்தூர் நகராட்சியிலே சுமார் 336 துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் அதிகம் நிரம்பி இருக்கிற இந்த நகராட்சியிலே, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக பல்வேறு துப்புரவுப் பணிகளுக்கு பல நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே, அம்பத்தூர் நகராட்சிக்கு மட்டும் சுமார் ஒரு கோடியே, 4 இலட்சத்து, 96 ஆயிரம் ரூபாய் அரசு ஒதுக்கியிருக்கிறது. அந்த அடிப்படையிலே, பல பணிகளை நகராட்சி மேற்கொண்டிருக்கிறது. அந்த ஒரு கோடியே, 4

1994 மார்ச் 25]

இலட்சத்து 96 ஆயிரம் ரூபாயையும் முதற் கட்டப் பகுதியாக வைத்து, இன்றைக்குப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுபோல, இரண்டாவது பகுதிக்காக, அந்த நகராட்சி, சுமார் ரூ. 1 கோடியே 90 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டத்தை வழங்கியிருக்கிறது. அந்தத் தொகையிலே, துப்புரவுப் பணிகளுக்கு மட்டும் ரூ. 7 ½ இலட்சம், 'சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட்' என்று சொல்லுகிற வகையிலே, அதற்கான வெஹிகிள்ஸ், அதற்கான லாரிகள் போன்றவற்றை வாங்குவதற்காக ஒதுக்கியிருக்கிறது. கூடியவிரைவிலே, அவை கிடைக்கப்பெற்று, பணிகள் நல்லமுறையிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

100 –

ஏ. கே. படவேடு கிராமத்தில் மீன் வளர்ப்புத் திட்டம்

***21935–திரு. தா. வேடியப்பன்:**

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், ஏ.கே. படவேடு கிராமத்தின் உள்ளாட்சித் துறையின் குளத்தில் மீன் வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மேற்குறிப்பிட்ட குளம், 29--4--1991 ஆம் ஆண்டு முதல் ஊராட்சியால் மீன் துறை வசம், குத்தகை அடிப்படையில், மீன் வளர்ப்புக்காக 5 ஆண்டுகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 8-11-1991-ல் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு 1992-93-ல் 487.000 கிலோ மீனும் 1993-94-ல் 2450.350 கிலோ மீனும் உள்ளூர் மீனவர்கள் மற்றும் அரசு கூட்டுறவுச் சங்க மீனவர்களைக் கொண்டு பங்கு மீன் பிடிப்பு அடிப்படையில் அறுவடை செய்யப்பட்டது. இம்மீன்பிடிப்பு மூலம் மீன் துறைக்கு 2 ஆண்டுகளில் முறையே ரூ. 7,421/- மற்றும் ரூ. 16,706/- வருவாய் கிடைத்தது. விழுப்புரம், மண்டல மீன் துறை உதவி இயக்குநரால் மீன் வளர்ப்புப் பணிகள் தொடர்ந்து குத்தகைக் காலம் முடியும் வரை நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.